தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## இன்றைய வேளாண் செய்திகள்

28.09.2012 A.M

28th Sep 20012 | வேளாண் விரிவாக்க மையத்தில் ஒட்டுண்ணி: உதவி இயக்குனர்

நாமக்கல்: "கபிலர்மலை வேளாண் விரிவாக்க மையத்தில், முன்னுரிமை அடிப்படையில், விவசாயிகளுக்கு ஒட்டுண்ணி வழங்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:கபிலர்மலை வட்டாரத்தில், 6,000 ஹெக்டேர் பரப்பில், ஆண்டுதோறும் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரும்பு பயிரில், நான்கு மாதம் முதல், ஏழு மாதம் வரை, இடைக்கனு புழுத்தாக்குதல் ஏற்பட்டு கரும்பு மகசூல் குறைவதுடன், சர்க்கரையின் தரமும் குறையும். மேலும், சொத்தை ஏற்பட்டு சிறு சிறு கணுவாகி கரும்பு வளர்ச்சி குன்றி காணப்படும்.இந்நிலையில், பூச்சி மருந்து கொண்டு புழுக்களை அழிப்பது சிரமம். எனவே, இடைக்கணு புழுவை கட்டுப்படுத்திட, ஒட்டுண்ணி பெற்று கரும்பு பயிரில் விட்டு தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும், 120 முதல், 210 நாள் வரை, 15 நாள் இடைவெளியில் ஏக்கருக்கு, 1 சி.சி., முட்டை ஒட்டுண்ணியை ஆறு முறை வயலில் கட்டுவதன் மூலம், இடைக்குழு புழுத் தாக்குதலை நல்ல முறையில் கட்டுப்படுத்தலாம்.ஒரு சி.சி., முட்டை ஒட்டுண்ணி, 26 ரூபாய் விலையுடையதாகும். ஒட்டுண்ணி தேவைப்படும் விவசாயிகள், கபிர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்திற்கு வந்து, ஒரு ஹெக்டேர் பரப்புக்கு, 65 ரூபாய் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். முன்னுரிமை அடிப்படையில் ஒட்டுண்ணி வழங்கப்படும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 28th Sep 20012 | கூடுதலாக மகசூலைப் பெற வேளாண் துறையினர் "ஐடியா'

பெரம்பலூர்: ""விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்," என்று வேளாண்துணை துணை இயக்குனர் பேசினார்.
"அட்மா' வேளாண்மை திட்டத்தின்கீழ் விதை சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சி, வேப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்தது. பயற்சிக்கு யூனியன்குழு தலைவர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். வேப்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரசேகரன் அறிமுக உரையாற்றினார். பயிற்சியை பெரம்பலூர் வேளாண்மை துணை இயக்குனர் சுப்ரமணியன் துவக்கி வைத்து பேசியதாவது:விவசாயிகள் அனைவரும் 100 சதவீத சாகுபடி பரப்புக்கு சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தினால் கூடுதல் மகசூல் அடைந்திட முடியும். அதற்கு ஆர்வமுள்ள விவசாயிகள் விதை உற்பத்தியில் அதிகம் ஈடுபட வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.பெரம்பலூர் விதை சான்று உதவி இயக்குனர் முரளீதரன், விதை சான்று அலுவலர் பழனிச்சாமி, அரியலூர் விதை சான்று அலுவலர் காசிநாதன், பெரம்பலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தெய்வீகன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். பயிற்சி ஏற்பாடுகளை வேப்பூர் வட்டார உதவி விதை அலுவலர் பாலுச்சாமி, வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

## 28th Sep 20012 | தரமான விதைகள் வழங்க உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி நடந்தது.
தியாகதுருகம் வேளாண் உதவி இயக்குனர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். விதைசான்று அலுவலர் அன்பழகன் முன்னிலை வகித்தார். விழுப்புரம் விதைசான்று உதவி இயக்குனர் வேலாயுதம் பயிற்சியை துவக்கி வைத்து
பேசினார்.
விதை அலுவலர் சரவணன், அன்பழகன், சீனுவாசன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். விதை பண்ணை அமைத்தல், சுத்திகரித்தல், சான்று அட்டை பொருத்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டது.
வேளாண் அலுவலர் பொன்னுராசு, புஷ்பராணி, விரிவாக்க அலுவலர் கோபால் மற்றும் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம் தாலுகாவிற்குட்பட்ட உதவி விதை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேம்பாட்டு முகமை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## 28th Sep 20012 | கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

ராசிபுரம்: மல்லசமுத்திரம் யூனியன், கட்டிப்பாளையம், தென்னமரத்துபாளையம், மரப்பரை, பள்ளக்காடு, வையப்பமலைபுதூர், தளவாம்பாளையம் ஆகிய கிராமங்களில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது.
மரப்பரை பஞ்சாயத்து தலைவர் விஜயன் தலைமை வகித்து, முகாமை துவக்கி வைத்தார். கால்நடை உதவி மருத்துவக் குழுவினர் பாலாஜி, மணிசேகரன், சண்முகம் ஆகியோர் பசு மற்றும் எருமை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். மொத்தம், 752 மாடுகளுக்கு, தடுப்பூசி போடப்பட்டடது. கால்நடை பராமாரிப்பு துறை டாக்டர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## 28th Sep 20012 | வறட்சியால் 10,000 ஏக்கர் நெல் நாற்று நாசம்

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வறட்சி காரணமாக, பத்தாயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகி விட்டதால், இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்' என, குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.
கிருஷ்ணகிரியில், மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் மகேஸ்வரன் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரகாசம், வேளாண் இணை இயக்குனர் (பொ) முகமது ஜபருல்லா, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மோகன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் நடராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:செந்தில்குமார்: மத்தூர் ஒன்றியத்தில், மா தோட்டங்களை பராமரிக்க, தோட்டக்கலை துறை உரங்கள் வழங்கவில்லை. தற்போது, மழை பெய்துள்ளதால், உரம் வழங்கினால், மா தோட்டத்தை உழவு செய்து உரமிட முடியும்.தோட்டகலை துறை துணை இயக்குனர் மோகன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மா தோட்டம் பராமரிப்பு பணிக்கு, விவசாயிகளுக்கு வழங்க உரம் வந்துள்ளது. அனைத்து மா விவசாயிகளுக்கும், ஒரு வாரத்தில் உரம் வழங்கப்படும்.ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக, பத்தாயிரம் ஏக்கரில் சாகுபடி செய்த நெல் நாற்றுகள், முற்றிலும் கருகிவிட்டது. விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகையை வழங்க வேண்டும்.கலெக்டர் மகேஸ்வரன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தை, வறட்சி மாவட்டமாக அறிவிக்க, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்து, இழப்பீட்டு தொகை வழங்கினால், நெல் நாற்று விட்டு பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படும்.ராஜா: கே.ஆர்.பி., அணை வலது புற ஊற்றுக்கால்வாய், பல இடங்களில் சேதமடைந்துள்ளதால், கால்வாயில் செல்லும் தண்ணீர், மீண்டும் ஆற்றுக்குள் செல்கிறது. இதை

சரி செய்ய வேண்டும்.பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் குமார்: ஊற்றுக்கால்வாயில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்ய, திட்ட மதிப்பீடு செய்து, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நிதி வந்தவுடன், கால்வாய் சரி செய்யும் பணி துவங்கப்படும்.சக்திவேல்: மத்தூர் பனை வாரியத்தில் இருந்த தேக்குமரங்களை, சிலர் வெட்டி விற்பனை செய்து விட்டனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.கலெக்டர்: பனை வாரியம் உள்ள இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்பதால், பொதுப்பணித்துறை செயற்பொறியாளரை கொண்டு விசாரித்து, மரங்களை வெட்டி விற்பனை செய்தவர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்படும்.லோகாபிராம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பருவமழை பொய்த்துப் போன நிலையில், நிலத்தடி நீரை நம்பி விவசாயம் நடந்து வருகிறது. எனவே, விவசாயத்துக்கு கூடுதலாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் நடராஜன்: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாய தேவைக்கு கூடுதல் மின்சாரம் தேவை என, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உத்தரவு வந்தவுடன் நடைமுறைபடுத்தப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

| 28th Sep 20012 | வாழை மர பொருட்கள் பயன்பாடு ஆலோசனை |
|---|---|

கரூர்: வாழை மரத்திலான பொருட்களை பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கரூர் நகராட்சி அலுவலகத்தில், ப்ளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக, வாழை மரத்தால் உருவாக்கப்பட்ட பொருட்கள் பயன்பாடு குறித்த, ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது.கூட்டத்தில், ப்ளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதால் உடல்நலத்துக்கு ஏற்படும் விளைவுகள், 40 மைக்ரான் அளவு குறைவான அளவுள்ள ப்ளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக, வாழை மரத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட இலை, தட்டு ஆகியற்றின் பயன்பாடு குறித்து, மாவட்ட புதுவாழ்வு திட்ட அலுவலர் ரூபேல் பேசினார்.நகராட்சி கமிஷனர் கோபால கிருஷ்ணன் (பொ) இன்ஜினியர் புண்ணியமூர்த்தி, சுகாதார ஆய்வாளர் செந்தில் உட்பட பலர் பங்கேற்றனர்.

| 28th Sep 20012 | மழை, சூறாவளியால்100 ஏக்கர் வாழை நாசம் கவலையில் ஆழ்ந்த டெல்டா விவசாயிகள் |
|---|---|

தஞ்சாவூர்: தஞ்சையில், சில வாரங்களாக விட்டு, விட்டு, ஒரு நாள், இருநாள் என, இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. இரவு, 11 மணிக்கு மேல் துவங்கும் மழை, சில சமயங்களில், இரண்டு மணி நேரத்துக்கும் மேல் பெய்கிறது. நேற்று முன்தினம் நள்ளிரவும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், பலத்த மழை, சூறாவளி காற்றுடன் பெய்தது.

வாழை உள்ளிட்ட விவசாய பயிர்கள் நாசமடைந்து, விவசாயிகள் நஷ்டத்தில் தவிக்கும் நிலை

ஏற்பட்டுள்ளது. கண்டியூர் பகுதியில் ரோட்டில் மரங்கள் விழுந்து, சாலைகள் அடைக்கப்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.ரோட்டோரம் இருந்த, 30க்கும் மேற்பட்ட குடிசை, வீடுகளின் கூரை மீது மரங்கள் விழுந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை.இதுகுறித்து, காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத்தலைவர் ரவிச்சந்தர் கூறியதாவது:தஞ்சை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவில் பெய்த மழையால் நடுக்காவிரி, வலப்பங்குடி பகுதிகளில் வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விழுந்தது. இப்பகுதியில், 100 ஏக்கரில், 40 லட்சம் மதிப்புள்ள வாழைகள் நாசமடைந்துள்ளது. அதனால், ஏக்கருக்கு, 30 ஆயிரம் நஷ்ட ஈடு விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டும். தற்போது, குலைதள்ளி, காய்கள் முற்றும் நடுத்தர பருவத்தில் வாழைகள் இருந்தது. இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.அம்மையகரம், வரகூர், கண்டமங்கலம், செந்தலை கிராமப்பகுதிகளில், நெற்கதிர்கள் தற்போது பால் பிடித்த பருவத்தில் இருந்தது. இந்நிலையில் காற்றடித்ததில் நெற்பயிர்கள் மண்ணோடு, மண்ணாக சாய்ந்து விட்டது. கதிர் முற்றி சூறாவளி காற்றடித்து, அடியோடு சாய்ந்திருந்தாலும் நெல் அறுவடை செய்திருக்கலாம். தற்போது பச்சையாக பால் பிடிக்கும் பருவத்தில் சாய்ந்துள்ளதால் பதராகி விடும். அதனால், பயன் இருக்காது.இந்நிலையில், மத்திய அரசு உயர்த்தி அறிவித்த நெல்லுக்கான ஆதார விலை குவிண்டாலுக்கு, 140 ரூபாயை குறுவை அறுவடையிலேயே வழங்கினால், விவசாயிகள் நஷ்டத்திலிருந்து மீள முடியும்.ஏற்கனவே காவிரி பொய்த்து, உரப்பற்றாக்குறை ஏற்பட்டு, ஃபோர்வெல் மூலம் குறுவை சாகுபடியை மிகுந்த கஷ்டத்துக்கு நடுவில் செய்துள்ள நிலையில், திடீர் மழை, சூறாவளி காற்றும் வஞ்சனை செய்து, சிரமத்தை அதிகப்படுத்தியுள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.நடப்பாண்டு டெல்டா பாசனத்துக்கு காவிரி நீர் உரிய காலத்தில் கிடைக்காமல் குறுவை, சம்பா பயிர் சாகுபடி கேள்விக்குறியாகியுள்ள நிலையில், தஞ்சையில் திடீர் மழை, சூறாவளி காற்று வீசி பயிர்கள் பெருமளவில் சேதமடைவது, விவசாயிகளை மேலும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

## 28th Sep 20012 | பயிற்சி முகாம்

பரமக்குடி: சூடியூரில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தில் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் சுப்பிரமணியன் தலைமை வகித்து பேசுகையில், ""30 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்கு கட்டங்களாக பயிற்சி அளிக்கப்படும். தரமான விதைகளை பயன்படுத்தவும், உரச் செலவை குறைக்க, நெல் விதையுடன், உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும்," என்றார். உதவி இயக்குநர் கண்ணையா, அலுவலர் நாராயணமூர்த்தி, கோபாலகிருஷ்ணன், வரதராஜன், உதவி அலுவலர் சந்தைவழியான், தொழில்நுட்ப அலுவலர் ஹேமலதா பங்கேற்றனர்.

28th Sep 20012

## நடப்பு கரீப் பருவத்தில்...அரசின் நெல் கொள்முதல் 14 சதவீதம் உயரும்



மத்திய அரசு, 2012-13ம் கரீப் பருவத்தில் (ஜூலை-அக்.,), பொது வினியோக திட்டத்திற்காக 4 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்டதை (3.50 கோடி டன்) விட, 14 சதவீதம் அதிகமாகும்.

**உற்பத்தி:**மத்திய அரசின் உணவு தானிய தொகுப்பிற்கான நெல் கொள்முதல், வரும் அக்டோபர் 1ம் தேதி தொடங்கும். இப்பணியை,தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் (நாபெட்) துணையுடன், இந்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.,) மேற்கொள்ளும்.மத்திய வேளாண் அமைச்சகம், நடப்பு 2012-13ம் நிதியாண்டிற்கான நெல் உற்பத்தி குறையும் என, மதிப்பிட்டுள்ள நிலையில், அதற்கு நேர்மாறாக, நெல் கொள்முதல் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து, அரசு அதிகாரிகள் கூறுகையில்," நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதால், அதன் கொள்முதல் உயர வாய்ப்புள்ளது' என, தெரிவித்தனர்.தற்போது, ஒரு குவிண்டால், பொது மற்றும் உயர் ரக நெல்லுக்கான கொள்முதல் விலை, 1,250 ரூபாயில் இருந்து 1,280 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை, சென்ற ஆண்டில், 1,080 ரூபாய் மற்றும் 1,110 ரூபாயாக இருந்தது.

**முதல் மதிப்பீடு:**மத்திய வேளாண் அமைச்சகத்தின் முதல் மதிப்பீட்டில், நடப்பு நிதியாண்டில், நெல் உற்பத்தி 8.55 கோடி டன்னாக குறையும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற நிதியாண்டில், சாதனை அளவாக, 9.15 கோடி டன்னாக இருந்தது.அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட, சந்தை விலை குறைய வாய்ப்புள்ளது. அவ்வாறு குறையும்பட்சத்தில்,

தேவைப்படும் மானியம் தொடர்பான முடிவுகளை அரசு எடுக்கும் என, வேளாண் அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய வேளாண் அமைச்சகம், பல வகை உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, 30 -40 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது.கரீப் பருவ நெல் கொள்முதல், பஞ்சாப், ஹரியானா போன்ற வட மாநிலங்களில் இருந்து முதன் முதலாக துவங்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. "பரவலான கொள்முதல் திட்டம் (டீ.பி.எஸ்)' அறிமுகமானதை தொடர்ந்து, "நாபெட்', அக்டோபர் கடைசியில் பீகார், ஒடிசா,மேற்குவங்கம் மற்றும் உத்தர பிரதேச மாநிலங்களில் நெல்லை கொள்முதல் செய்யத் துவங்கும்.

**மாநில உரிமை:"**தற்போது, வட மாநிலங்களில் இருந்து நெல் வரத் துவங்கியுள்ளது. வரும் அக்டோபரில், கிழக்கு மாநிலங்களில் இருந்து வரத் துவங்கும்' என, அதிகாரிகள் மேலும் கூறினர்."டீ.பி.எஸ்'-ன் கீழ், ஒவ்வொரு மாநிலமும், அவற்றின் சார்பாக உணவு தானியங்களை கொள்முதல் செய்ய, முகமை அமைப்புகளை நியமிக்கலாம்.

எனினும், இவை, மத்திய அரசின் பொது வினியோக திட்டம் மற்றும் மத்திய உணவு தானிய தொகுப்பின் ஓர் அங்கமாகவே செயல்படும்.

உணவு தானிய கொள்முதலில் ஈடுபடும், மாநில முகமை அமைப்புகளின் பணிகளில், மத்திய அரசின் "நாபெட்' மற்றும் "எப்.சி.ஐ.,' ஆகியவற்றின் பிராந்திய அலுவலகங்களின் பங்களிப்பும் இருக்கும்."டீ.பி.எஸ்'-ல், ஒரு மாநிலம் கொள்முதல் செய்யும் உணவு தானியங்களை, அந்த மாநிலமே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது சிறப்பம்சமாகும். இதற்கு முன்பு, வடமாநிலங்களுக்காக மட்டுமே உணவு தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அந்த மாநிலங்களுக்கும், இதர மாநிலங்களின் பொது வினியோக திட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்படும். இத்தகைய நடைமுறையில், சரக்கு போக்குவரத்தின் போது, உணவு தானியங்கள் வீணாவதை தடுக்கும் நோக்கில் "டீ.பி.எஸ்' அறிமுகப்படுத்தப்பட்டது. இதில், மாநில அரசுகளும் ஆர்வத்துடன் இணைந்துள்ளன.

**எண்ணெய் வித்துக்கள்:**இதனிடையே, "நாபெட்', மகாராஷ்டிராவில் இருந்து எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளை கொள்முதல் செய்யத் துவங்கியுள்ளது. எப்.சி.ஐ., பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கூட்டுடன், நடப்பு ஆண்டில் கூடுதலாக 5-6 டன் உணவு தானியங்களை சேமித்து வைக்கக் கூடிய கிடங்குகளை ஏற்படுத்தியுள்ளது.சென்ற 2010-11ம் கரீப் சந்தைப்படுத்தும் பருவத்தில், எப்.சி.ஐ., இதர அரசு முகமை அமைப்புகளுடன் இணைந்து, 3.40 கோடி டன் நெல்லை கொள்முதல் செய்துள்ளது.

இதில், மிக அதிக அளவாக, ஆந்திர மாநிலத்தில் இருந்து 96 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அடுத்த இடங்களில், பஞ்சாப் (86 லட்சம் டன்), சத்தீஸ்கர் (37 லட்சம் டன்), உத்தர பிரதேசம் (25 லட்சம் டன்), ஒடிசா (24 லட்சம் டன்), ஹரியானா (16 லட்சம் டன்),

தமிழ்நாடு (15 லட்சம் டன்) மற்றும் மேற்கு வங்கம் (13 லட்சம் டன்) ஆகியவை உள்ளன.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

இன்றைய வேளாண் செய்திகள்

27.09.2012 P.M

28.09.2012 A.M

28th Sep 20012 | சூறைக்காற்றில் சாய்ந்த வாழை மரங்கள்



கடலூர், செப். 27: கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு திடீரென சூறைக்காற்றுடன் பெய்த மழையில் வாழை, முருங்கை உள்ளிட்டவை சேதம் அடைந்தன.

கடந்த டிசம்பர் மாதம் புயல் வீசியது முதல் கடலூர் மாவட்டத்தில் கடுமையான வெயில் அடித்தது. புதன்கிழமை காலை கடலூரில் வெயில் சுட்டெரித்தது. மாலை 5 மணிக்கு மேல் திடீரென கருமேகம் சூழ்ந்து, இரவு 7 மணியளவில் பலமான சூறைக் காற்று வீசியது.

மண்ணையும், தூசியையும் சூறைக்காற்று வாரி அடித்ததில் சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்தனர். அதே நேரத்தில் மழையும் சேர்ந்து அடித்ததால் சாலைகளில் செல்வோர் நிலைகுலைந்து, வீடு திரும்ப முடியாமல் அவதிப்பட்டனர். மழை நின்றும் நீண்ட நேரம் மின்னல் நீடித்தது.

இதனால் விளம்பர டிஜிட்டல் பேனர்கள் முறிந்து விழுந்தன. சில டிஜிட்டல் பேனர்கள், அவை கட்டப்பட்டு இருந்த கழிகள் முறிந்து அருகில் இருந்த மின் கம்பிகளின் மீது விழுந்ததில் மின் கம்பிகள் அறுந்தன.÷மின் கம்பிகள் அறுந்ததால் கடலூர், முதுநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

வாழைகள் சேதம்: கடலூர் மற்றும் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழை, முருங்கை உள்ளிட்ட முறிந்து விழுந்து சேதம் அடைந்தன. ÷கடலூர் ஒன்றியம் மலை கிராமங்களான

ராமாபுரம், வடக்கு ராமாபுரம், சாத்தங்குப்பம், வழிசோதனை பாளையம், வண்டிக்குப்பம் உள்பட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து சாய்ந்து விட்டன. கரும்பு பயிர்களும் காற்றில் சாய்ந்து சேதம் அடைந்தது.

புயல் பாதிப்பு, மழையின்மை, மின்வெட்டு, தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே பயிர் செய்யப்பட்ட வாழை, கரும்பு, முருங்கை உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் சூறைக்காற்றால் சேதம் அடைந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

28th Sep 20012

## இன்றும் மழை பெய்யும்

சென்னை, செப். 28: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. சென்னையில் 60 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக்காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. 3 நிமிஷங்கள் வரை வீசிய சூறைக்காற்றால் சுமார் 50-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

மாநிலத்திலேயே அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூரில் 150 மில்லி மீட்டர் மழை பதிவானது. வெப்பச் சலனம் காரணமாகவே புதன்கிழமை மழைபெய்ததாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்தது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் பரவலாக வெள்ளிக்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய கனமழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்த வரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழையின் அளவு (மில்லி மீட்டரில்):

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் - 150., சிதம்பரம் - 90., விருத்தாசலம் - 80., அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், வேதாரண்யம் - 70., கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு, நாகப்பட்டினம் மாவட்டம் கொள்ளிடம், ஆரணி - 60., கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, கும்பகோணம், திருவிடைமருதூர், திருத்துறைப்பூண்டி, மயிலாடுதுறை - 50., அரியலூர் மாவட்டம் செந்துறை, அரியலூர், விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, சங்கராபுரம், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் - 40., திருவாரூர் மாவட்டம்

நீடாமங்கலம், மன்னார்குடி, நாகப்பட்டினம், சீர்காழி, விழுப்புரம் மாவட்டம் மயிலம். வானூர், விழுப்புரம், கோபிசெட்டிப்பாளையம், திருவள்ளூர் மாவட்டம் சோழவரம், கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில், புதுச்சேரி - 30., விழுப்புரம், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை,

கள்ளக்குறிச்சி, சென்னை நுங்கம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம், திருவண்ணாமலை, வந்தவாசி, திருவாரூர் மாவட்டம் குடவாசல், காரைக்கால், தஞ்சாவூர், ஒரத்தநாடு, விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம் - 20., திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், கடலூர், நெய்வேலி, தொழுதூர், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, அதிராமப்பட்டினம், பாபநாசம், கரூர், திருவண்ணாமலை மாவட்டம் போளூர், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, கிருஷ்ணகிரி, திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி, லால்குடி, செங்கல்பட்டு, கோவை மாவட்டம்

27th sep 2012 P.M

## 28th Sep 20012 | மாநில அளவிலான மகசூல் போட்டி

திருக்கோவிலூர், செப். 26: திருக்கோவிலூர் அருகே சென்னகுணம் கிராமத்தில், மாநில அளவிலான கம்பு பயிர் மகசூல் போட்டி அண்மையில் நடைபெற்றது.

விவசாயப் பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், பல்வேறு பயிர் இனங்களுக்கான மகசூல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதையடுத்து நடைபெற்ற இப்போட்டியில், திருவண்ணாமலை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சக்கரவர்த்தி, விழுப்புரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராஜேந்திரன், வேளாண் அலுவலர் சரவணன் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

மேலும், இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கார்த்திக்கேயன் நிலத்தில் அதிகாரிகள் முன்னிலையில் கம்பு அறுவடை செய்து அளவீடு செய்யப்பட்டது.

வேளாண் உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார், மகசூல் போட்டியில் பங்கேற்கும் முறைகள் பற்றி முன்னோடி விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு விளக்கம் அளித்தார்.

நீர்ப்பாசன சங்கத் தலைவர் பழனிவேல், ஊராட்சித் தலைவர் கலியன், துணை வேளாண் அலுவலர் புகழேந்தி, உதவி வேளாண் அலுவலர்கள் திருமலை, வெங்கடகிருஷ்ணன், சிவநேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 28th Sep 20012 | சம்பா சாகுபடி தகவல்களை இணையதளத்தில் அறியலாம்

தஞ்சாவூர், செப். 26: சம்பா சாகுபடி பற்றி விவசாயிகள் எந்த நேரத்திலும் தெரிந்து கொள்ள இணையதள வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் சம்பா சாகுபடியின் சிறப்பு தொகுப்பு திட்டம் குறித்து ஒன்றிய அளவிலான விழிப்புணர்வு கருத்தரங்கத்தில் அவர் மேலும் பேசியது:

தமிழக முதல்வர் விவசாயிகளின் நலன் காக்க சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். இந்தத் திட்டம் குறித்து கடைமடைப் பகுதி விவசாயிகளும் தெரிந்து பயன் பெறுவதற்காக ஒன்றிய அளவிலான கருத்தரங்கங்கள் நடத்தப்படுகின்றன.

மாவட்டத்தில் குறுவை பருவத்தில் இழந்த பரப்பளவையும் சேர்த்து மொத்தம் 1.15 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான உழவு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சமுதாய நாற்றங்கால் அமைக்கும் பணி இலக்கைவிட கூடுதலாக 2,600 ஹெக்டேரில் விதைக்கப்பட்டுள்ளது. 83 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சம்பா சாகுபடி திட்டத் தகவல்களை விவசாயிகள் இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் என்றார் பாஸ்கரன்.

ஒன்றியக் குழுத் தலைவர் கோவி. மகாலிங்கம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் எம்.இசட். முகமது யாஹியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 28th Sep 20012 | நவீன விவசாயப் பயிற்சி

செங்கம், செப். 26: செங்கம் அருகே விவசாயிகளுக்கு நவீன விவசாயம் குறித்து வனத்துறை மூலம் புதன்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

செங்கம் அடுத்த புதுப்பாளையம் வனச்சரகம் சார்பில் விவசாயிகள் மற்றும் வனக்குழு தலைவர்களுக்கு நவீன விவசாயம் மற்றும் ஆடு, மாடு வளர்ப்புகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கு மாவட்ட வன அலுவலர் வீ.நாகநாதன் தலைமை வகித்தார்.

பயிற்சியில் புதுப்பாளையம் பகுதியில் உள்ள விவசாயிகள் சு.இனியவன், சு.வாசு ஆகியோர் பண்ணைக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மாடு வளர்ப்பு முறைகள் குறித்து விளக்கினர். நவீன விவசாய முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

## 28th Sep 20012 | விவசாயிகளுக்கு மானியத்தில் களையடுப்பு கருவி

வாணியம்பாடி, செப். 26: ஆலங்காயம் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி திட்ட விவசாயிகளுக்கு மானியத்தில் விசை களையடுப்பு கருவி வழங்கும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண் துறை சார்பில், வள்ளிப்பட்டு கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் குழுக்களுக்கு இக் கருவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு வள்ளிப்பட்டு ஊராட்சித் தலைவர் கோவி.ஜெயராமன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.காந்தி, களை எடுக்கும் கருவியை பயன்படுத்தும் முறை மற்றும் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விவாசாயிகளுக்கு விளக்கினார்.

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் லீலா சுப்பிரமணி, ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் எம்.கோபால் ஆகியோர் கருவிகளை வழங்கினர் (படம்).

வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வன் மாவட்ட கவுன்சிலர் கே.பி.ஜெயசக்தி, ஒன்றியக்குழு உறுப்பினர் கே.பி.மணி உள்ளிட்டோர்

பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

27.09.2012 P.M

28.09.2012 A.M

28th Sep 20012

## அடுத்த வாரத்திலிருந்து முட்டை விலை உயரும்



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முட்டை விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. முட்டை விலை 355 காசுகளாக தொடர்வது என முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்து நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்.இ.சி.சி) தலைவர் செல்வராஜ் வெளியிட்ட அறிக்கை:

உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலத்தில் முட்டை தேவை அதிகரித்துள்ளதால் பர்வாலா உள்ளிட்ட இடங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் காலாண்டு விடுமுறையால் சத்துணவு திட்டத்துக்கு அனுப்பப்பட்டு வந்த முட்டை நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த வாரம் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் முட்டை தேவை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. டீசல் விலையேற்றம் காரணமாக முட்டை உற்பத்தி செலவு கணிசமாக கூடியுள்ளதால், முட்டை விற்பனை விலையை உயர்த்த வேண்டிய நிலை உள்ளது.

28th Sep 20012

## கூடுதல் சர்க்கரை விடுவிப்பு மத்திய அரசு நடவடிக்கை



புதுடெல்லி : பண்டிகை காலத்தை முன்னிட்டு, பொது சந்தைக்கு 4 மில்லியன் டன் சர்க்கரையை விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. விநாயகர் சதுர்த்தியில் இருந்து தொடர்ச்சியாக ஜனவரி மாதம் பொங்கல் வரையில் பல்வேறு பண்டிகைகள் வருகின்றன. இதுதவிர கிறிஸ்துமஸ், புத்தாண்டு பிறப்பு உள்ளிட்டவையும் வருகின்றன. இதனால் இனிப்புகள் அதிகளவில் விற்பனையாகும். இவற்றுக்காக அக்டோபர், நவம்பர் மாதங்களில் மத்திய அரசு பொதுச் சந்தைக்கு கூடுதல் சர்க்கரையை விடுவிக்கும்.

கடந்த ஜூலையில் இருந்து செப்டம்பர் வரையிலான காலத்தில் மத்திய அரசு 4.5 மில்லியன் டன் சர்க்கரையை விடுவித்துள்ளது. ஆனால், இதே அளவிலான சர்க்கரை வரும் 2 மாதங்களில் மட்டும் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்த 2 மாதங்களுக்காக பொது சந்தை விற்பனைக்காக 4 மில்லியன் டன் சர்க்கரையை விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை: மத்திய அரசு விடுவிக்க முடிவு செய்துள்ள சர்க்கரையில் 45 சதவீதத்தை ஆலைகள் தங்களுடைய இருப்பில் இருந்து விற்பனை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆலைகளில் இருந்து 3,96,000 டன் சர்க்கரை ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும். தற்போது பொதுச் சந்தையில் சர்க்கரை விலை அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, அதன் விலையை கட்டுக்குள் வைப்பதற்காக மத்திய அரசு கூடுதல் சர்க்கரை விடுவிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் இருந்து அடுத்த மாதம் 4.5 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி

சர்க்கரை உற்பத்தி குறைந்ததால் பிரேசில் நாட்டில் இருந்து 4 லட்சத்து 50 ஆயிரம் டன் சர்க்கரை அடுத்த மாதம் இறக்குமதி செய்யப்பட உள்ளது. பிரேசில் நாட்டில் விலை குறைவு என்றபோதும், செலவினங்கள் இருப்பதால் வெளிச்சந்தைக்கு கொண்டு வரப்படும்போது வெளிச்சந்தை விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது வெளிச்சந்தையில் சர்க்கரை கிலோ ரூ.45 வரையும், ரேஷன் கடையில் ரூ.13.50 க்கும் விற்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக சர்க்கரை உற்பத்தி அதிகரித்திருந்ததால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

27th Sep 2012 P.M

28th Sep 20012

## விவசாயிகளுக்கு காரீப் முன்பருவ பயிற்சி

பழநி, : அட்மா திட்டத்தின்கீழ் பழநி வட்டார விவசாயிகளுக்கு காரீப் முன்பருவ பயிற்சி பழநியில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைச்சாமி தலைமை வகித்தார். காரீப் பருவ பயிர்களுக்கான தொழில்நுட்பக் கருத்துக்களை வாகரை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய மண்ணியல் பேராசிரியர் பாரதி விளக்கி கூறினார். இயற்கை பண்ணையத்தின் முக்கியத்துவம் குறித்துமகாராஜா கூட்டுப்பண்ணை நிர்வாக மேலாளர் புகழேந்தி பேசினார்.

திருந்திய நெல் சாகுபடி அனுபவங்கள் குறித்து கலிக்கநாயக்கன்பட்டி அட்மா திட்ட விவசாயி துரைச்சாமி பேசினார். மண்புழு உரம், இயற்கை உரங்களின் முக்கியத்துவம் குறித்துதிண்டுக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் பொன்ராஜ் ராஜேந்திரன் பேசினார். ஏற்பாடுகளை பழநி வட்டார துணை வேளாண் அலுவலர் துரைச்சாமி செய்திருந்தார்.

28th Sep 20012

## சம்பா நெல் இன்சூரன்ஸ் அக்டோபர் 31 கடைசி

சிவகங்கை, : வேளாண்மை இன்சூரன்ஸ் கம்பெனி மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிரவேலு கூறியதாவது:

வேளாண்மை இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் சிவகங்கை, கடலூர், நாமக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் மேம்பட்ட தேசிய வேளாண்மை இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சம்பா நெல் பயிர் இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் இன்சூரன்ஸ் செய்த 345 விவசாயிகளுக்கு ரூ.8 லட்சம் இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டும் மேம்பட்ட தேசிய வேளாண்மை இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் பயிர் கடன் பெறாத விவசாயிகள் அக்.31ம் தேதி வரை சேரலாம். இத்திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ.5,107 இன்சூரன்ஸ் செய்யலாம். இதற்காக விவசாயிகள் ரூ.276 பிரீமியமாக செலுத்த வேண்டும். கூடுதலாக ரூ.5,837க்கு இன்சூரன்ஸ் செய்ய பிரீமியமாக ரூ.788 செலுத்த வேண்டும்.

எனவே பயிர் கடன் பெறாத விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையம் அல்லது அருகில் உள்ள கூட்டுறவு, வர்த்தக வங்கிகளில் இன்சூரன்ஸ் செய்வதற்கான விண்ணப்பங்களை பெற்று கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்துடன் சிட்டா அல்லது அடங்கல் அல்லது வி.ஏ.ஓ சான்றை இணைத்து கொடுக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 044 43403400 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

28th Sep 20012

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

காஞ்சிபுரம், : காஞ்சிபுர மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு, மாவ ட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடக்கிறது. இதில், வேளாண்துறை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறவேண்டும் என்று மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

28th Sep 20012

## கால்நடை பராமரிப்பு துறை சார்பில் தீவன பயிற்சி முகாம்

கம்பம், : கால்நடை பராமரிப்பு துறை சார்பாக கம்பம் கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் முறை குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு மாவட்ட உதவி இயக்குனர் ஜெகன் முத்தையா தலைமை வகித்தார். கால்நடை அறிவியல் பல்கலை கழக உதவி பேராசிரியர் செந்தில் குமார் முன்னிலை வகித்தார். இதில் கால்நடைகளுக்கு புண்ணாக்கு அதிகளவில் தீவனமாகவும், கலப்பு தீவனம், அரிசி மக்காச்சோளம் கம்பு உள்ளிட்ட தானியங்கள், பால் உற்பத்தியை பெருக்க புரத சத்து அதிகம் உள்ள தீவனங்கள், பசுந்தீவனம், காய்ந்த தட்டைகள் கொடுத்தால் தான் கால்நடைகள் விரைவில் சினை பிடித்தும் நோய்கள் தாக்காமல் பால் உற்பத்தியையும் பெருக்கலாம் என எடுத்துக்கூறினார்கள். இதில் கால்நடை மருத்துவர்கள் காமேஸ் கண்ணன், குணசேகரன், சந்திரசேகர், செல்வம், சாருணி, மருத்துவ உதவியாளர்கள் மற்றும் கம்பம், காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த ஏராளமான கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

28.09.2012 A.M

| 28th Sep 20012 | சந்தன மரம் வளர்க்க முன்வந்தால் விவசாயிகளுக்கு மானியம் வழங்க படும்<br>கோலாரில் நடந்த கருத்தரங்கில் மந்திரி வர்த்தூர் பிரகாஷ் பேச்சு |
|---|---|

சந்தன மரம் வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க படும் என்று கோலாரில் நேற்று நடந்த கருத்தரங்கில் பேசும்போது மந்திரி வர்த்தூர் பிரகாஷ் தெரிவித்தார்.

கருத்தரங்கு

கோலார் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சந்தன மர வளர் பு குறித்த கருத்தரங்கு நேற்று கோலாரில் நடந்தது. சந்தன மரம் வளர்த்தால் அதன் மூலம் விவசாயிகளின் எதிர்காலம் எந்த வகையில் பாதுகா பாக இருக்கும் என்பது குறித்து கருத்தரங்கில் விளக்க பட்டது.

நிகழ்ச்சிக்கு கலெக்டர் விசுவநாத் தலைமை தாங்கினார். சிற பு விருந்தினராக மாவட்ட பொறு பு மந்திரி வர்த்தூர் பிரகாஷ், முன்னாள் மந்திரி மாலூர் எம்.எல்.ஏ. கிருஷ்ணய்ய ஷெட்டி ஆகியோர் கலந்து கொ டு பேசினார்கள்.

அரசு மானியம்

விழாவில் மந்திரி வர்த்தூர் பிரகாஷ் பேசுகையில் கூறியதாவது:–

விவசாயிகள் சந்தன மரங்களை வளர்க்க முன்வர வே டும். சந்தன மரம் வளர்த்தால் விவசாயிகளின் எதிர்காலம் செழி பாக இருக்கும். மாநில அரசும் அவர்களுக்கு மானியம் வழங்க தயாராக இருக்கிறது.எனவே விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான நிலத்தில் சந்தன மரக்கன்றுகளை நட முன்வர வே டும்.

இவ்வாறு வர்த்தூர் பிரகாஷ் பேசினார்.

அனுமதி பெற்று...

கிருஷ்ணய்ய ஷெட்டி எம்.எல்.ஏ. பேசும்போது "எனது மாலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் 500 ஏக்கர் நில பர பில் சந்தன மரம் வளர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது" என்றார்.

கலெக்டர் பேசும்போது கூறியதாவது:–

முன்பெல்லாம் சந்தன மரங்கள் வளர் பது குற்றமாக கருத பட்டது. இ போது அ படி எதுவும் கிடையாது. முறை படி உங்களுடைய நிலத்தில் அரசு அனுமதிபெற்று சந்தன மரக்கன்றுகள் நடலாம். ங்கள் சந்தன மரக்கன்றுகள் வளர்க்க விரும்பினால், நிச்சயமாக து பாக்கி லைசென்சு பெற வே டும். லைசென்சு கொடுக்க மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது.

முன்கூட்டியே தகவல்

சந்தன மரங்களை ங்களாகவே அறுக்கும்போது அரசுக்கு முன்கூட்டியே முறை படி தகவல் தெரிவிக்க வே டும். இது மட்டும்தான் நிபந்தனை. உங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு சந்தன மரக்கன்றுகள் வழங்க மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

| 28th Sep 20012 | சூறாவளி காற்றில் 1 1/2 லட்சம் வாழைகள் சேதம் |
|---|---|

அன்னூர் பகுதியில் சூறாவளி காற்றினால் 11/2 லட்சம் வாழை மரங்கள் சாய்ந்து விழுந்தன. இதை பார்த்த பல விவசாயிகள் கவலை அடைந்தனர்.

1 1/2 லட்சம் வாழைகள் சேதம்

கோவை மாவட்டம் அன்னூர் ஊராட்சி ஒன்றிய பகுதியை சேர்ந்த குமாரபாளையம், அல்லிகுளம், கணுவக்கரை, ஆம்போதி, செல்லனூர், வடக்கலூர், பொன்னே கவு டன்புதூர், பச்சபாளையம், கெம்பநாயக்கன்பாளையம், பசூர், அ.மேட்டு பாளையம், பொங்கலூர், கு பனூர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் நேந்திரன் வாழை பயிரிட்டு இருந்தனர்.

இந்த நிலையில் அன்னூர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் 5–30 மணி வரை அரை மணிநேரம் சூறாவளி காற்று, இடி டன் கூடிய பலத்த மழை பெய்தது. இதில் 30க்கும் மேற்பட்ட தோட்டங்களில் வாழை மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தன. வாழைகள் வெட்டுக்கு தயாராக இருந்த நிலையில் வாழைகள் நாசம் அடைந்தது விவசாயிகளை கவலையில் ஆழ்த்திஉள்ளது.

விவசாயிகள் கவலை

சூறாவளி காற்று வீசியதில் சுமார் 11/2 லட்சம் வாழைகள் சேதம் அடைந்தன. இதன் மதி பு பல லட்சம் இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். நேந்திரன் வாழை கிலோ ஒன்றுக்கு ரூ.25 முதல் ரூ.28 வரை விற்பனை செய்ய படுகிறது. தார் ஒன்றுக்கு 8 முதல் 12 கிலோ எடை கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். சூறாவளி காற்றினால் வாழை மரங்கள் சாய்ந்து சேதம் அடைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வே டும் என்று விவசாயிகள் தர பில் அரசுக்கு கோரிக்கை விடுக்க பட்டு உள்ளது.